பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை

04 07 2025 **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. **Trinidad – Tobago**-வில் தாம் ஆற்றிய உரையை உலகெங்கிலும் உள்ள இந்திய மக்களுக்கு சமர்ப்பிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. 2026-ஆம் ஆண்டு ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

3. ஊட்டச்சத்து பயிர்களை ஊக்குவிப்பதற்கான வேளாண் ஊட்டச்சத்து இயக்கத்தை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

4. தமிழகத்தில் தனிமனிதனுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

5. ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா – புருன்டியின் **Sada Nahimana** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<>>>>>

**Trinidad – Tobago** -வில் இந்திய வம்சாவளியினரிடையே தாம் ஆற்றிய உரையை உலகம் முழுவதிலும் உள்ள 35 மில்லியன் இந்திய மக்களுக்கு சமர்ப்பிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியாவின் யுபிஐ டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் கரீபியன் நாடு என்ற பெருமையை **Trinidad – Tobago** பெற்றுள்ளதையும் அவர் தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுபிஐ டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை திட்டமும், **Tobago**-வில் வசிக்கும் கிரிமித்திய சமாஜ் எனப்படும் குடியேறிய தொழிலாளர்களுக்கு இந்திய குடியுரிமை அட்டையை வழங்குவதாக பிரதமர் அறிவித்தார்.

இந்த குடியுரிமை அட்டையும், யுபிஐ-யும் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<>>>>>

2026-ஆம் ஆண்டு ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களை இன்னும் ஒருவாரத்திற்குள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஹஜ் பயண ஆய்வுக்கூட்டத்திற்குபின் இதை தெரிவித்த அமைச்சர், இதற்கான படிவங்களில் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

ஹஜ் பயணம் மேற்கொள்ளும் ஆண், பெண் இருபாலரையும் தனித்தனியாக தங்க வைப்பதற்கு உரிய ஏற்பாடுகளை செய்துதருவதற்கான முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாக திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<<>>>>>

“வேளாண் ஊட்டச்சத்து இயக்கம்” என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

ஊட்டச்சத்து பயறு வகைகளை விவசாயிகள் அதிக அளவில் பயிரிடுவதை ஊக்குவிக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த இயக்கத்தின்கீழ், காய்கறி,

பழச்செடிகளுக்கான விதைகள் மற்றும் பயறு தொகுப்புகளை சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்கள், ஆவின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

மாமல்லபுரத்தில் கடந்த நான்கு நாட்களாக இந்த திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் கறவை மாட்டுக்கடன் பெற்றுத்தர பால் கூட்டுறவு சங்கங்களின அதிகாரிகள் உதவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பாலின் தரத்திற்கு ஏற்றவாறு விலை வழங்கிட வேண்டும் என்றும் கால்நடை தீவனம் மற்றும் கலப்புதீவனம் வழங்கி பால் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதற்கான நிதி ஆதாரங்களை பெறுவதற்கான வழிமுறைகள் இந்த பயிற்சியில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆவின் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்றும், இதனால் கிராமப்புற பொருளாதாரம் உயரும் என்றும் திரு மனோ தங்கராஜ் கூறினார்.

<<<<<>>>>>

தமிழக அரசின் இந்தாண்டிற்கான தகைசால் தமிழர் விருது இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் திரு காதர் மொஹைதீனுக்கு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த விருது வரும் ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திர தினத்தன்று முதலமைச்சரால் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருதுடன் பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

<<<<<>>>>>

கடலூர் மாவட்டத்தில் மலையடி குப்பம், கீரப்பாளையம், கொடுக்கன்பாளையம் மற்றும் தெத்தான்குப்பம் கிராமங்களில் முந்திரி பயிர் செய்துவரும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், இந்த கிராம மக்கள் ஐந்து தலைமுறைகளாக தரிசு நிலத்தில் முந்திரி சாகுபடி செய்து வருவதாகவும், ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட முந்திரி மரங்கள் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

சட்ட விரோத ஆக்கிரமிப்பாளர்கள் என அந்த மரங்களை பிடுங்கி எறிவதற்கான முயற்சி எடுக்கப்படுவது அதிர்ச்சியையும், வேதனையையும் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

தோல் தொழிற்சாலை அமைப்பதற்காக இந்த மரங்களை வெட்டுவது நியாயமில்லை என்றும் கூறியுள்ளார்.

அரசு தரிசு நிலங்களில் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பட்டா வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

இதனிடையே, திரு நயினார் நாகேந்திரன், காவல்துறையினரின் தாக்குதலில் உயிரிழந்ததாக கூறப்படும் அஜித்குமாரின் சொந்த ஊரான சிவகங்கை மாவட்டம் மடப்புரத்திற்கு சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை தமிழகத்தில் நிலவுகிறது என்று கூறினார்.

இந்த படுகொலைக்கு காரணமானவர்கள் மீது சட்டரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டில் வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், மத்திய அமைச்சரவையால் அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேலைவாய்ப்புடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் அடுத்த மாதம் செயல்பாட்டிற்கு வர இருப்பதாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மண்டல ஆணையர் திரு எஸ். விஜய் ஆனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியார் நிறுவனங்களில் புதிதாக வேலைக்கு சேரும் ஊழியர்களுக்கு இரண்டு தவணைகளாக 15 ஆயிரம் ரூபாயும், வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்கு மூவாயிரம் ரூபாய் வரையும் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று கூறினார்.

<<<<<>>>>>

சென்னை தாம்பரம் விமானப்படை நிலையத்தில் முன்னாள் படை வீரர்களுக்காகன வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலர் டாக்டர் நித்தின் சந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 52 நிறுவனங்களும், 580 முன்னாள் படை வீரர்களும் கலந்துகொண்டதாக தெரிவித்தார்.

தனியார் நிறுவனங்கள், முன்னாள் படை வீரர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிப்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக திரு நிதின் சந்திரா கூறினார்.

<<<<<>>>>>

கோவை மற்றும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

திருவள்ளூர் மாவட்டம் காக்களூர் ஏரி மற்றும் தாமரைக் குளத்தினை மேம்படுத்தும் பணிகளை மாநில அமைச்சர் திரு நாசர் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார மையத்தினை மாநில அமைச்சர் திரு காந்தி இன்று திறந்துவைத்தார்.

----------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாளை முதல் நடைபெறவுள்ள கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் தவறாமல் பங்கேற்று கால்நடைகளை இந்நோயிலிருந்து பாதுகாக்குமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி அருணா கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

நாமக்கல் அரசு சட்டக்கல்லூரியில் தேசிய நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில், இன்று யோகாசன பயிற்சி முகாம் நடைபெற்றது.

<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா – புருன்டியின் **Sada Nahimana** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-3 என்ற செட் கணக்கில், இந்தியாவின் ருதுஜா போஸ்லே – சீனாவின் **Zheng** இணையை வென்றது.

------------

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.
பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாவது நாளான இன்று தனது முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிவரும் இங்கிலாந்து, உணவு இடைவேளையின்போது 5 விக்கெட் இழப்பிற்கு 249 ரன் எடுத்துள்ளது.
முன்னதாக, இந்தியா தனது முதல் இன்னிங்சில் 587 ரன் எடுத்தது.

<<<<<END>>>>>